1970 நவம்பர் 28]

DR. H. V. HANDE: May I know whether in the City of Madras an assessment has already taken place, whether the Government have with them a list of huts wiped out or partially wiped out and whether the authorities have started disbusing the amount?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் கொடுப்பதற்கு துவக்கப்பட்டு விட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் கூறிய விளக்கத்தையொட்டி, இதை விவாதிக்க சபையின் பிற நடவடிக்கைகளை ஒற்றிவைக்கத் தேவையில்லை என்று கருதி, இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(ஆ) நமனசமுத்திரத்திலுள்ள புதுக்கோட்டை டெக்ஸ்டைல்ஸ் மூடப்பட்டதும் தொழிலாளர் பாதிப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான் அவர்களும் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும், "திருச்சி மாவட்டம், நமனசமுத்திரத்திலுள்ள புதுக்கோட்டை டெக்ஸ்டைல்ஸ் கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளதால், 400-க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கின்ற அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி விவாதிக்க வேண்டும்" என்று ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி கதவடைப்பு முதலியவை காரணமாக, இந்தப் பேரவை நிகழ்ச்சிகளை ஒற்றிவைப்பது கூடாது என்று ஏற்கெனவே பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கிற காரணத்தினல், இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

3. கவனஈர்ப்பு

அரசு அச்சகத்தில் கையாடல் நடந்ததாக வந்துள்ள செய்தி குறித்து.

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காருக்குச் சொந்தமான சென்னை அச்சகத்தில் 1970 செப்டம்பரில் பல லட்சக்கணக்கான ரூபாய் கையாடியதாக வந்துள்ள செய்தியைப்பற்றியும், சர்க்கார் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியுமான பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர்-பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, சென்னை அரசு அச்சகத்திலுள்ள தலைமைக் காசாளர் பணம் செலுத்துதல், பணம் பிரித்து அளித்தல் ஆகிய அலுவல்களைக் கவனிப்பது அவரது கடமையாகும். தொழிலாளர்களுக்குக் கடன் வழங்க ஒரு கூட்டுறவுச் சங்கம் உள்ளது. ஒவ்வொரு மாதமும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் தரும்பொழுது அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய தொகையைக் குறிப்பிட்டு மொத்தம் வசூலாக வேண்டிய